போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

MAY 2, 1922.

ந. 8 (2).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம்௵ மேமீ 2வ. [விலை, 6 பை.

இந்தியக் கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கமிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம் ௵ மார்ச்மீ 8வ சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 15 OF 1922.

1922-ம் ௵த்து 15-ம் நெ.

A BILL TO PROVIDE FOR THE RESTRICTION AND CONTROL OF THE TRANSPORT OF COTTON IN CERTAIN CIRCUMSTANCES.

சில சந்தர்ப்பங்களில் பஞ்சை ஏற்றிக்கொண்டுபோவது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதற்காகவும் மேல்விசாரணை செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட்.

உயர்ந்த வகைகளைச் சேர்ந்த பஞ்சுடன் கீழ்த்தரமான வகைகளைச் சேர்ந்த பஞ்சைக் கலப்பதைத் தடுக்கும் காரியத்துக்காக, ரெயில் மார்க்கமாய் பஞ்சை ஏற்றிக்கொண்டுபோய் சில விஸ்தீர்ணங்களுக்குள் இறக்குமதிசெய்வது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதற்காகவும் மேல்விசாரணை செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, பஞ்சை ஏற்றிக்கொண்டு போவதைக் குறித்த 192 -ம் ௵த்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது -ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

1872-ம் ௵த்து 1-வது ஆக்ட்.

(a) "ஸெர்டிபை செய்யப்பட்ட நகல்" என்பது யாதொரு லைஸென்ஸ் சம்பந்தமாய் உபயோகிக்கப்படும்போது அது - அந்த லைஸென்ஸ் எந்த அதிகாரியால் கொடுக்கப்பட்டதோ அந்த அதிகாரியால், 1872-ம் ௵த்திய இந்துதேசத்து சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் ஷை லைஸென்ஸுக்கு ஸெர்டிபைசெய்து கொடுக்கப்படும் நகல் என்று அர்த்தமாகும் ;

(b) "பஞ்சு" என்பது - கொட்டை எடுக்கப்பட்டாவது கொட்டை எடுக்கப்படாமலாவதிருக்கும் பஞ்சு, பஞ்சுக் கழிவு, பஞ்சுக் கொட்டை ஆகிய இவைகள் உட்பட வேலை செய்யப்பட்டிராத சகல பஞ்சு என்று அர்த்தமாகும் ;

(c) "பஞ்சுக்கழிவு" என்பது - நூற்கழிவாயிராமல் யாதொரு பஞ்சாலையில் கீழே விழுவதனாலும் கிழியெடுக்கப்படுவதனாலும் பறந்துபோவதனாலும் மற்றப்படியும் ஏற்படும் கழிவுப் பொருள்களென்று அர்த்தமாகும் ;

(d) "லைஸென்ஸ்" என்பது - இந்த ஆக்டின்படி கொடுக்கப்பட்ட லைஸென்ஸ் என்று அர்த்தமாகும் ;

(e) "அறிக்கையிடப்பட்ட ஸ்டேஷன்" என்பது - 3-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட யாதொரு ரெயில்வே ஸ்டேஷன் என்று அர்த்தமாகும் ;

(f) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும் ;

(g) "பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணம்" என்பது - எந்த விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சை இறக்குமதிசெய்யக்கூடாதென்று 3-வது பிரிவின்படிக்கான விளம்பரமூலமாய்த் தடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்.

பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சை இறக்குமதி செய்யக்கூடாதென்று தடுத்து விளம்பரம் வெளியிடுவதற்கான அதிகாரம்.

3. (1) பிரதேச கவர்ன்மென்டார்-(தங்களுடைய) மாகாணத்தைச் சேர்ந்த யாதொரு விஸ்தீர்ணத்தில் விளையும் பஞ்சு கீழ்த்தரப் பஞ்சுடன் கலக்கப்படாதபடி பாதுகாக்கும் காரியத்துக்காக, பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், யாதொரு லைஸென்ஸின்படியும் அதிற்கண்ட திட்டங்களை அனுசரித்துமன்றி மற்றப்படி, ஷை விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சை இறக்குமதி செய்யக்கூடாதென்று தடுக்கலாம்.

(2) பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சை இறக்குமதி செய்வதற்கான லைஸென்ஸை யாதொரு நபர் வைத்திருந்தாலன்றி மற்றப்படி, அந்த விஸ்தீர்ணத்திலிராத யாதொரு ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒப்படை செய்யப்பட்ட பஞ்சை, அந்த விஸ்தீர்ணத்திலிருக்கும் குறிப்பிடப்பட்ட யாதொரு ரெயில்வே ஸ்டேஷனில், ஷை நபருக்கு ஒப்புவிக்கக்கூடாதென்றும் அந்த நபர் அதை ஒப்புவித்துக்கொள்ளக்கூடாதென்றும் மேலே கண்ட யாதொரு விளம்பரமூலமாய்த் தடுக்கலாம்.

1890-ம் ௵த்து 9-வது ஆக்ட்.

லைஸென்ஸ் கொடுக்கப் பெற்றிராத பஞ்சைக் கொண்டுபோக மறுப்பது.

4. (1) 1890-ம் ௵த்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டிலாவது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு ரெயில்வே ஸ்டேஷனின் ஸ்டேஷன் மாஸ்டராகிலும் அந்த ஸ்டேஷனில் ஏற்றப்படும் சரக்குகள் அல்லது சிப்பங்களைப் பதிவு செய்துகொண்டு அவைகள் விஷயமாய் அனுமதிச்சீட்டு கொடுக்க உத்தரவாதியாயிருக்கும் வேறே யாதொரு ரெயில்வே உத்தியோகஸ்தராகிலும் அறிக்கையிடப்பட்ட யாதொரு ஸ்டேஷனுக்கு ஒப்படை செய்யப்பட்ட ஏதாவது பஞ்சை, அவ்விரண்டு ஸ்டேஷன்களும் பாதுகாக்கப்பட்ட ஒரே விஸ்தீர்ணத்தில் இருந்தாலன்றி மற்றப்படியாயினும், ஷை அறிக்கையிடப்பட்ட ஸ்டேஷன் பாதுகாக்கப்பட்ட எந்த விஸ்தீர்ணத்தில் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்துக்குள் ஷை பஞ்சை இறக்குமதி செய்வதற்கான லைஸென்ஸுக்கு ஸெர்டிபை செய்யப்பட்ட நகலை ஒப்படை செய்பவர் ஹாஜர்ப்படுத்தினாலன்றி மற்றப்படியாயினும் ஏற்றிக்கொண்டு போகப்படுவதற்காக அந்த ஸ்டேஷனில் பெற்றுக்கொள்ளவோ அந்த ஸ்டேஷனிலிருந்து அனுப்பவோ அல்லது ரெயில்மார்க்கமாய்க் கொண்டுபோக விடவோ மறுக்கலாம்.

(2) லைஸென்ஸின் ஸெர்டிபை செய்யப்பட்ட நகல் ஒவ்வொன்றும் அந்தப்படி ஹாஜர்ப்படுத்தப்படும்போது அதை, ஒப்படையானது சரக்காகப் பதிவுசெய்து கொள்ளப்படும்போது இன்வாய்ஸுடனும் (வார்காமாவுடனும்), ஒப்படையானது சிப்பமாகப் பதிவு செய்துகொள்ளப்படும்போது வேபில்லுடனும் (ஏற்றுப்பட்டியுடனும்) சேர்த்து, ஒப்படை முடிவாய்ப் போய்சேரவேண்டிய இடத்துக்கு அதன்கூடவே அனுப்பவேண்டும் ; மேலும், அந்த இடத்திலே அதன் விஷயமாய் நிர்ணயிக்கப்பட்ட விதமாக நடவடிக்கை நடத்தவேண்டும்.

(3) இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தினாலாவது யாதொரு சட்டத்தின்படியாவது அந்த சமஸ்தானத்தில் இருக்கும் யாதொரு விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சு இறக்குமதி செய்யப்படக்கூடாதென்றோ அந்த சமஸ்தானத்தில் இருக்கிற யாதொரு ரெயில்வே ஸ்டேஷனில் பஞ்சு ஒப்புவிக்கப்படக்கூடாதென்றோ தடுக்கப்பட்டிருந்தால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், ஷை விஸ்தீர்ணமும் மேலேகண்ட யாதொரு ஸ்டேஷனும் முறையே பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணமாகவும் அறிக்கையிடப்பட்ட ஸ்டேஷனாகவும் இருந்தால் எப்படியோ அப்படியும் ஷை சட்டத்தின்பிரகாரம் கொடுக்கப்பட்ட யாதொரு லைசென்ஸானது இந்த ஆக்டின்படி கொடுக்கப்பட்ட லைசென்ஸாயிருந்தால் எப்படியோ அப்படியும், (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட நிபந்தனைகள் அந்த ஸ்டேஷனுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கும் சகல பஞ்சின் விஷயத்திலும் பிரயோகப்படுமென்று பிரசித்தஞ்செய்யலாம்.

அறிக்கையிடப்பட்ட ஸ்டேஷனில் பஞ்சு வந்து சேர்ந்தால் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.

5. (1) அறிக்கையிடப்பட்ட ஒரு ஸ்டேஷனுக்கு ஏதாவது பஞ்சு ஒப்படை செய்யப்பட்டிருந்து அந்த ஸ்டேஷனில் அது வந்து சேர்ந்தால், ஸ்டேஷன் மாஸ்டராவது அந்த ஸ்டேஷனில் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சரக்குகளையாகிலும் சிப்பங்களையாகிலும் வரப்பெற்றுக் கொண்டு ஒப்படைதாரருக்கு ஒப்புவிப்பதற்கு உத்தரவாதியாயுள்ள வேறே ரெயில்வே உத்தியோகஸ்தராவது - அறிக்கையிடப்பட்ட ஸ்டேஷன், எந்த ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து பஞ்சு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த ரெயில்வே ஸ்டேஷன் ஆகிய இவ்விரண்டும் பாதுகாக்கப்பட்ட ஒரே விஸ்தீர்ணத்தில் இருந்தாலன்றி மற்றப்படி, அறிக்கையிடப்பட்ட ஷை ஸ்டேஷன் பாதுகாக்கப்பட்ட எந்த விஸ்தீர்ணத்தில் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்துக்குள் பஞ்சை இறக்குமதி செய்வதற்கான லைசென்ஸை ஒப்படைதாரர் வைத்திருக்கிறாரென்று தாம் தெரிந்து திருப்தியடைகிறவரையில் ஷை பஞ்சை ஒப்புவிக்க மறுக்கவேண்டும்; மேலும், அவர் அந்தப்படி தெரிந்து திருப்தியடையாவிட்டாலும் நியாயமான ஒரு காலத்துக்குள் ஒப்படைதாரராவது அவருக்காகப் பிரவர்த்திக்கும் யாதொரு நபராவது (பஞ்சை) ஒப்புவித்துக்கொள்ளும்பொருட்டு ஹாஜராகாவிட்டாலும், அவர் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி பஞ்சு ஒப்புவிக்க மறுத்துவிடப்பட்டிருக்கிறது அல்லது பஞ்சு ஒப்புவித்துக்கொள்ளப்படவில்லை என்னும் விஷயத்தைத் தெரியப்படுத்தி, ஷை பஞ்சை அது எந்த ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒப்படை செய்யப்பட்டதோ அந்த ரெயில்வே ஸ்டேஷனுக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும்.

1890-ம்௵த்து 9-வது ஆக்ட்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி திருப்பி அனுப்பிவிடப்பட்டாவது 4-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மேலேகண்டதைப்போல் சங்கதி எழுதி திருப்பி அனுப்பிவிடப்பட்டாவதிருக்கிற ஏதாவது பஞ்சை வரப்பெற்றுக்கொள்ளும் யாதொரு ஸ்டேஷன் மாஸ்டராகிலும் வேறே ரெயில்வே உத்தியோகஸ்தராகிலும் - ஷை பஞ்சு அந்தபடி திருப்பி அனுப்பிவிடப்பட்டிருக்கிறதென்றும், பஞ்சு எந்த ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஒப்படை செய்யப்பட்டதோ அந்த ஸ்டேஷனுககு அதைக் கொண்டுபோய் அங்கிருந்து அதை (மறுபடியும்) கொண்டுவருவது சம்பந்தமாய்ச் சேரவேண்டிய ஏதேனும் வீதத்தையாவது டெர்மினல் முதலிய கட்டணங்களையாவது ஒப்படை செய்தவர் செலுத்தவேண்டுமென்றும் கண்டு ஒரு நோடீஸை 1890-ம்௵த்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்ட் 141-வது பிரிவில் அனுமதி கொடுத்திருக்கும் எந்த விதமாகவாயினும் ஒப்படை செய்தவருக்குச் சேர்ப்பிக்கச் செய்யவேண்டும்; மேலும், ஷை ஆக்ட் 55-வது பிரிவிற்கண்ட சகல காரியங்களுக்காகவும் அந்தக் கட்டணங்கள் ஒப்படை செய்தவரிடமிருந்து சேரவேண்டியிருப்பதாக எண்ணப்படும்.

தண்டனை.

6. எவராகிலும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளையாவது இதன்படி செய்யப்பட்ட யாதொரு விளம்பரம் அல்லது விதியையாவது மீறி, அறிக்கையிடப்பட்ட யாதொரு ஸ்டேஷனிலிருந்து ஏதாவது பஞ்சை ஒப்புவித்துக்கொண்டாலும் பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்குள் ஏதாவது பஞ்சை இறக்குமதி செய்தாலும் இறக்குமதி செய்ய எத்தனித்தாலும், யாதொரு ஸ்டேஷன் மாஸ்டராவது வேறே ரெயில்வே உத்தியோகஸ்தராவது 5-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி, நியாயமான காரணமில்லாமலே ஏதாவது பஞ்சை ஒரு ஒப்படைதாரருக்காகிலும் வேறே நபருக்காகிலும் ஒப்புவித்தாலும், அவர்கள் - ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத்துக்கும், பிற்பட்டு எப்போதாவது குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், மூன்று மாதத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனைக்கும் அல்லது ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத்துக்கும் அல்லது இவ்விரண்டு தண்டனைகளுக்கும் உள்ளாவார்கள்; 5-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி நடக்கும் விஷயத்தில், நியாயமான காரணம் இருந்ததென்று ருஜூ செய்யும் பொறுப்பு ஷை ஸ்டேஷன் மாஸ்டர் அல்லது வேறே ரெயில்வே உத்தியோகஸ்தரைச் சார்ந்ததாகும்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

7. (1) பிரதேச கவர்ன்மென்டார் - அடியிற்கண்ட விஷயங்களில் எதற்காகவாவது நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு விதிகள் செய்யலாம் ; அவையாவன:—

(a) யாதொரு லேஸென்ஸின்படிக்கும் அதிற்கண்ட திட்டங்களை அனுசரித்து மன்றி மற்றப்படி, பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்குள் ரஸ்தா மார்க்கமாகவாவது நதி அல்லது கடல் மார்க்கமாகவாவது பஞ்சை இறக்குமதி செய்வதைத் தடுப்பது ;

(b) லேஸென்ஸுகளில் காணவேண்டிய ஷரத்துகளும் திட்டங்களும், அவைகளை இன்ன அதிகாரிகள் கொடுக்கலாமென்பதும் ;

(c) லேஸென்ஸுகளும் அவைகளின் ஸெர்டிபை செய்யப்பட்ட நகல்களும் சம்பந்தப்படுகிற பஞ்சு ஒப்புவிக்கப்படுவதன்மேலும் ஒப்புவிக்கப்பட்ட பிறகும் அந்த லேஸென்ஸுகள் விஷயமாயும் நகல்கள் விஷயமாயும் இன்னவிதமாய்ப் பிரவர்த்திக்கவேண்டு மென்பது.

(2) அப்படிப்பட்ட எந்த விதிகளையாவது யாதொரு லேஸென்ஸில் கண்ட திட்டங்களையாவது எவராகிலும் எவ்விதமாகவேனும் மீறி நடந்து அது இந்த ஆக்டில் மற்றப்படி தண்டிக்கப்படத்தக்கதாய் ஏற்பட்டிராவிட்டால், அவர் ஐந்நூறு ரூபாயக்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவாரென்று ஷை விதிகளில் நிபந்தனை காணலாம்.

விளம்பரங்களையும் விதிகளையும் வெளியிடுவதற்குப் பிரதேச சட்டநிரூபண சபையாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெறுவது.

8. யாதொரு கவர்னருடைய மாகாணத்தின் பிரதேச கவர்ன்மென்டார் - 3-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தை அல்லது 7-வது பிரிவின்படிக்கான விதியை, மசோதா ரூபமாக அந்த மாகாணத்தின் சட்ட நிரூபண சபைக்குமுன் வைத்து திருத்தத்துடனே திருத்தமில்லாமலோ புதிய அம்சங்களைச் சேர்த்தோ அல்லது சேர்க்காமலோ அந்த சட்டநிரூபண சபையார் தீர்மானமூலமாக அதை அங்கீகரித்திருந்தாலன்றி மற்றப்படி, செய்யக்கூடாது; ஆனால், மேலே கண்டபடி அங்கீகரிக்கப்படுவதன்மேல் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த விளம்பரம் அல்லது விதியை அந்தப்படி அது அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ரூபத்தில் வெளியிடலாம்.

இந்த ஆக்டின்படி செய்யப்படும் காரியங்கள் விஷயமாய்ப் பாதுகாப்பு.

9. நல்ல எண்ணத்துடன் இந்த ஆக்டின்படி செய்யப்படுகிற அல்லது செய்ய உத்தேசிக்கப்படுகிற எந்தக் காரியத்தின் விஷயமாகவும் யாதொரு நபரின்மேல் வியாஜ்ஜியம் தொடரவுங்கூடாது சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை நடத்தவுங்கூடாது.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

1917-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்துதேசத்து பஞ்சு விசாரணைக் கம்மிட்டியார் அடியிற்கண்ட விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் ; அவையாவன :—

(1) நீண்ட இழைப் பஞ்சு விளையும் சில விஸ்தீர்ணங்களிலிருக்கிற பஞ்சுக் கொட்டையெடுக்கும் சாலைகளிலும் பஞ்சை அழுத்தும் சாலைகளிலும் நீண்ட இழைப் பஞ்சுடன் குட்டையான இழைப் பஞ்சைக் கலப்படஞ்செய்யும் பழக்கம் மிக அதிகமாய் இருந்தது. அந்தப்படி செய்வதன் நோக்கம் என்னவென்றால், நீண்ட இழைப் பஞ்சுக்குக் கிடைக்கும் உயர்ந்த கிரயம் மேற்படி கலப்புக்கும் கிடைக்கும்படிச் செய்வதேயாகும் ;

(2) இதன் காரணமாக மேற்படிவகைகளைச் சேர்ந்த பஞ்சுக் கொட்டைகள் ஒன்றாய்க் கலக்கப்பட்டுப்போனதனால் அனேக உயர்ந்த வகைகளைச் சேர்ந்த பஞ்சு உற்பத்தி மிகவும் கெட்டுப்போய்விட்டது ;

(3) மிருதுவான பஞ்சுக்கழிவு "கபாக்களோடு" (இயற்கையான இலவம் பஞ்சோடு) - கலப்படம் செய்வதற்குங்கூட உபயோகிக்கப்பட்டுவந்தது ;

(4) குட்டையான இழைப் பஞ்சு பல தடவைகளில் நீண்ட இழைப் பஞ்சு விளையும் விஸ்தீர்ணங்களுக்கு ரெயில் மார்க்கமாய் அனுப்பப்பட்டு, அங்கிருந்து கலப்படங்கூட செய்யாமலே நீண்ட இழைப் பஞ்சாக மறுபடியும் ஏற்றி அனுப்பப்பட்டுவந்தது.

2. மேலே (1), (2) குறிப்பிட்ட விஷயங்களுக்கு உதாரணமாக ஷை கம்மிட்டியார் ப்ரோச் பிரதேசத்தில் குட்டையான இழைப் பஞ்சை இறக்குமதிசெய்த விஷயங்களை எடுத்துக்காட்டினார்கள். அந்தப்படி இறக்குமதி செய்ததனால் ஏற்பட்டதென்னவென்றால் ப்ரோச் பஞ்சுக்கு முன்னேயிருந்த பிரக்கியாதி அனேகமாய்ப் போய்விட்டது. இதாமான உயர்ந்த வகைகளைச் சேர்ந்த பஞ்சுக்கும் இதே கதி உண்டாகும்போல் இருக்கிறது. பஞ்சு எந்த விஸ்தீர்ணத்தில் விளைந்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்த விஸ்தீர்ணத்தின்

பெயரையும் கீர்த்தியையும் அனுசரித்து, அதாவது கட்டுகள் கடைசியாய் எந்த ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அனுப்பப்படுகின்றனவோ அந்த ஸ்டேஷனின் பெயரை அனுசரித்து, பஞ்சைவிற்பனை செய்வதும் வாங்குவதுமான வியாபார வழக்கம் மேலே (4) குறிப்பிட்ட பாகத்தில் சொல்லியிருக்கிறபடி செய்வதற்கு சாதகமாயிருக்கிறது.

3. இந்தப்படி செய்யப்படும் கெட்ட காரியங்களினால் மொத்தத்தில் பருத்திக் கைத்தொழிலுக்கே பிரமாதமாகவும் அபாயகரமாகவும் பாதகம் உண்டாகிறபடியால், இவ் விஷயத்தில் கவர்ன்மென்டார் தக்ஷணமே நடவடிக்கை நடத்துவது முக்கியமாயும் அவசிய மாயும் இருக்கிறது. இதில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள கீழ்த்தர பஞ்சையாவது பஞ்சுக்கழிவையாவது பாதுகாக்க விரும்பும் விஸ்தீர்ணங்களில் லைசென்ஸின்படிக்கன்றி மற்றப்படி இறக்குமதி செய்வதைப் பிரதேச கவர்ன்மென்டார் தடுப்பது சாத்தியமாயிருக் கும்படிச்செய்து, இந்த மசோதா ஆக்டில் மேற்படி விஷயங்களுக்காக ஒரு பரிகாரம் ஏற் படுத்தியிருக்கிறது.

இந்த மசோதா ஆக்டில் கண்டிருக்கும் முக்கியமான நிபந்தனைகள் எவையென்றால் :—

(1) மாகாண சட்டநிரூபண சபையாரின் சம்மதத்தை முன்னதாகப் பெற்று இன்ன விஸ்தீர்ணங்களை பாதுகாக்கப்பட்டிருப்பவைகளாக எண்ணவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யவும் அப்படிப்பட்ட ஸ்டேஷன்கள் விஷயமாய் அறிக்கையிடவும் பிரதேச கவர்ன் மென்டுகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. அறிக்கையிடப்பட்ட அப்படிப்பட்ட யாதொரு ஸ்டேஷனுக்கு அதே விஸ்தீர்ணத்திலுள்ள அறிக்கையிடப்பட்ட இதர ஸ்டே ஷன்களிலிருந்தன்றி மற்றப்படி பஞ்சை ஒப்படைசெய்து அனுப்ப அனுமதி கொடுக்கப்படு வதில்லை.

(2) பாதுகாக்கப்பட்ட விஸ்தீர்ணத்துக்குள்ளிருக்கும் பஞ்சாலைக்காரர்களுக்கு வெளி யிடத்துப் பஞ்சு வேண்டியிருக்கும்போது அப்படிப்பட்டவர்கள் விஷயத்திலும், கைத் தொழில் காரியங்களுக்காக பஞ்சுக்கழிவை வாங்குபவர்கள் விஷயத்திலும் இதுபோன்ற இதர விஷயங்களிலும் அனுகூலமாயிருக்கும்படி மேற்கண்ட தடைக்கு சில விலக்குகள் ஏற்படுத்துவது அவசியமாகும். அப்பிரகாரமே, லைசென்ஸ் கொடுக்கும் யாதொரு ஏற் பாட்டிற்காக விதிகள் தயார்செய்யவும், லைசென்ஸுகள் பிறப்பிப்பதற்கான அதிகாரிகளை நியமிக்கவும் பிரதேச கவர்ன்மென்டுகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

(3) ஸ்டேஷன் மாஸ்டர்களாவது சிப்பங்களையாகிலும் சரக்குகளையாகிலும் ஒப்பு விப்பதற்கு உத்தரவாதியாயிருக்கும் இதர ரெயில்வே உத்தியோகஸ்தர்களாவது தகாதபடி தங்களுடைய ஸ்டேஷன்களுக்கு ஒப்படைசெய்து அனுப்பப்பட்ட பஞ்சை ஒப்பு வித்தால் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுமென்று கண்டு அந்தப்படி செய்யவொட்டா மல் அவர்களைத் தடுத்திருக்கிறது.

வி. ஏ. இன்னிஸ்.

டெல்லி, 1922-ம் ௵ மார்ச் ௴ 6௳.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டுகள்
ACTS OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம் வருஷம் மார்ச்மீ 5வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. IX OF 1922.
1922-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE PROVINCIAL SMALL CAUSE COURTS ACT, 1887, AND THE CODE OF CIVIL PROCEDURE, 1908, IN ORDER TO PROVIDE FOR THE AWARD OF COSTS BY WAY OF COMPENSATION IN RESPECT OF FALSE OR VEXATIOUS CLAIMS OR DEFENCES IN CIVIL SUITS OR PROCEEDINGS.

ஸிவில் வியாஜ்ஜியங்களிலாவது விவகாரங்களிலாவது செய்யப்பட்ட பொய்யான அல்லது அலைக்கழிக்கும்படியான தாவாக்கள் அல்லது எதிர்வாதங்கள் விஷயமாய்ப் பிரதிபலனுகை செலவு கொடுக்கும்படி தீர்மானிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு 1887-ம் வருஷத்து ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டையும் 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச்சட்டத்தையும் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1887-ம் வருஷத்து ப்ரொவின்ஷியல் ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்டையும் 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தையும் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :— 1887-ம் வருஷத்து 9-வது ஆக்ட். 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

சுருக்கமான பெயரும் வழங்கத்தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, 1922-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாய், அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய தேதியில் (அவர்களுடைய) மாகாணம் முழுவதிலுமாவது அதன் யாதொரு பாகத்திலாவது இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கவேண்டுமென்று கட்டளையிடலாம்.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்டில் புதிய 35-A பிரிவை அமைத்துக்கொள்வது.

2. (இதில் பின்னால் ஷை கோட் என்று குறிப்பிடப்படும்) 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 1-ம் பாகத்தில் 35-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அதாவது :— 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

பொய்யான அல்லது அலைக்கழிக்கும்படியான தாவாக்கள் அல்லது எதிர்வாதங்கள் விஷயத்தில் பிரதிபலன் ரூபமாய்க் கொடுக்கப்படும் செலவு.

"35-A. (1) அப்பீலாகிராத யாதொரு வியாஜ்ஜியத்திலாவது வேறே விவகாரத்திலாவது யாதொரு கட்சிக்காரர் தாவாவாகிலும் எதிர்வாதமாகிலும் அதன் யாதொரு பாகமாகிலும் தமக்கு விரோதமாயிருக்கிற மட்டில் பொய்யானதாகவோ அலைக்கழிக்கும்படியானதாகவோ இருக்கிறதென்றும் அதைக் கொண்டுவந்திருக்கும் அல்லது செய்திருக்கும் கட்சிக்காரருக்கு அவ்விஷயம் தெரியுமென்றும் காரணம் காட்டி அந்த தாவா அல்லது எதிர்வாதத்தைப்பற்றி ஆட்சேபனை செய்து, அதற்குப்பிறகு ஆட்சேபனை செய்கிறவருக்கு விரோதமாயிருக்கிறமட்டில் ஷை தாவா அல்லது எதிர்வாதமானது முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிடப்பட்டாலும் விட்டுவிடப்பட்டாலும் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டாலும், ஷை ஆட்சேபனையானது எவ்வளவு சீக்கிரமாய்ச் செய்யப்படக்கூடுமோ அவ்வளவு சீக்கிரமாய்ச் செய்யப்பட்டிருந்து அது நியாயமானதென்பதைப்பற்றி கோர்ட்டார் தெரிந்து திருப்தியடையும் பட்சத்திலே, அவர்கள் - அப்படிப்பட்ட தாவா அல்லது எதிர்வாதத்தைப் பொய்யானதென்றோ அலைக்கழிக்கும்படியானதென்றோ கொள்வதற்குத் தங்களுக்குள்ள காரணங்களை எழுதிவைத்த பிறகு, அந்த தாவா அல்லது எதிர்வாதம் எந்தக் கட்சிக்காரரால் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அல்லது செய்யப்பட்டிருக்கிறதோ அவர் ஆட்சேபனை செய்தவருக்குப் பிரதிபலனாகச் செலவு கொடுக்கவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம்.

(2) எந்தக் கோர்ட்டாரும் - ஆயிரம் ரூபாயோ திரவிய விஷயமாய்த் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிகார வரம்புக்குச் சரியான ஒரு தொகையோ இவ்விரண்டில் எது குறைவாயிருக்கிறதோ அதற்கு மேற்பட்ட ஒரு தொகையைச் செலுத்தும்படி அப்படிப் பட்ட உத்தரவு எதுவும் செய்யக்கூடாது :

1887-ம் ஞு த்து 9-வது ஆக்ட்.

ஆனால், 1887-ம் ஞு த்து ப்ரொவின்ஷியல் ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்டின்படி ஸ்மால் காஸ் கோர்ட்டின் விசாரணை அதிகாரம் செலுத்திக்கொண்டு அந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டாயிராத யாதொரு கோர்ட்டின் திரவிய விஷயமான அதிகார வரம்பு இருநூற்றைம்பது ரூபாய்க்குக் குறைவாயிருந்தால், ஹைகோர்ட்டார் - இருநூற்றைம்பது ரூபாய்க்கு அதிகப்படாமலும் ஷை வரம்பைக்காட்டிலும் நூறு ரூபாய்க்கு மேற்பட அதிகப்படாமலுமுள்ள யாதொரு தொகையைச் செலவாகக் கொடுக்கும்படி இந்தப் பிரிவின் பிரகாரம் தீர்மானிக்க அந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கலாம்:

மேலும், ஹைகோர்ட்டார் - இந்தப் பிரிவின்படி யாதொரு கோர்ட்டாராவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த கோர்ட்டார்களாவது செலவாகக் கொடுக்கும்படி தீர்மானிக்க அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் தொகை விஷயமாய் வரையறை ஏற்படுத்தலாம்.

(3) இந்தப் பிரிவின்படி யாருக்கு விரோதமாய் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட எந்த நபரும் - அந்தப்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே, அவரால் கொண்டுவரப்பட்ட அல்லது செய்யப்பட்ட யாதொரு தாவா அல்லது எதிர்வாத விஷயமாய்க் குற்ற சம்பந்தமாய் ஏற்படும் எவ்வித பொறுப்பினின்றும் நிவாரணையாகமாட்டார்.

(4) பொய்யான அல்லது அலைக்கழிக்கும்படியான தாவா அல்லது எதிர்வாத விஷயமாய் இந்தப் பிரிவின்பிரகாரம் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்ட யாதொரு பிரதி பலன் தொகையை, அந்த தாவா அல்லது எதிர்வாத விஷயமாய் நஷ்ட ஈட்டுக்காகவாவது பிரதிபலனுக்காகவாவது பிற்பாடு கொண்டுவரும் யாதொரு வியாஜ்ஜியத்தில் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.''

1908-ம் ஞு த்து 5-வது ஆக்ட் 104-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை கோட் 104-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே—

(i) (f) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(ff) 35 A பிரிவின்படிக்கான உத்தரவு ;"

(ii) (i) அடையாளமிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"ஆனால், (ff) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்ட யாதொரு உத்தரவின்மேல், எந்த உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாதென்னும் முகாந்தரத்தைக் கொண்டாவது குறைந்த ஒரு தொகையைச் செலுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கவேண்டுமென்னும் முகாந்தரத்தைக்கொண்டாவது செய்யப்பட்டாலன்றி மேற்படி எந்த அப்பீலும் நிற்காது.''.

1908-ம் ஞு த்து 5-வது ஆக்ட் 1-வது ஷெட்யூலைச் சேர்ந்த 41-வது அதிகாரத்தில் திருத்தம்.

4. ஷை கோட் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 41-வது அதிகாரத்தில் கண்ட 33-வது விதியுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"ஆனால், அப்பீல் கோர்ட்டார் - எந்தக் கோர்ட்டாரின் டிக்ரியின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் யாதொரு ஆட்சேபணையின்மேல் 35 A பிரிவின்படிக்கான உத்தரவைப் பிறப்பிக்காமல் விட்டுவிட்டிருந்தாலும் நிராகரித்திருந்தாலும், அந்த ஆட்சேபணையை அனுசரித்து அப்படிப்பட்ட உத்தரவு எதையும் பிறப்பிக்கக்கூடாது."

1887-ம் ஞு த்து 9-வது ஆக்ட்.

1908-ம் ஞு த்து 5-வது ஆக்ட்.

1887-ம் ஞு த்து 9-வது ஆக்ட் 24-வது பிரிவில் திருத்தம்.

5. 1887-ம் ஞு த்திய ப்ரொவின்ஷியல் ஸ்மால் காஸ் கோர்ட்டுகளாக்ட் 24-வது பிரிவில், "ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 588-வது பிரிவு (29)-வது உட்பிரிவில்" என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பர்த்தியாக, "1908-ம் ஞு த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 104-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (ff) அடையாளமிட்ட பகுதியிலாகிலும் (h) அடையாளமிட்ட பகுதியிலாகிலும்" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும் "அதின் பேரில்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அந்தப் பிரிவின்படி அப்படிப்பட்ட உத்தரவின்மேல் எந்த முகாந்தரத்தைக்கொண்டு அப்பீல் செய்துகொள்ளலாமோ அப்படிப் பட்ட யாதொரு முகாந்தரத்தைக்கொண்டு" என்னும் வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1922-ம்௵ மார்ச்மீ 5உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. X OF 1922.

1922-ம்௵த்து 10-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN LIMITATION ACT, 1908.

1908-ம்௵த்திய இந்துதேசத்துக் கால நிர்ணயச்சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1908-ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1908-ம்௵த்து 9-வது ஆக்ட்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1922-ம்௵த்திய இந்துதேசத்துக் கால நிர்ணய (திருத்துவதற்கான) சட்டமென்று சொல்லலாம்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட் 5-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்தின் 5-வது பிரிவில் "யாதொரு சட்டதிட்டத்தினாலாவது விதியினாலாவது" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "யாதொரு சட்டதிட்டத்தினாலாவது அதன்படியாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட்.

1908-ம்௵த்து 9-வது ஆக்ட் 29-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 29-வது பிரிவில்,—

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட உட்பிரிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

நிவாரணைகள்.

"29. (1) இந்த ஆக்டிலுள்ளதெதனாலும் 1872-ம்௵த்திய இந்துதேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 25-வது பிரிவுக்கு பாதகம் உண்டாகமாட்டாது.

1872-ம்௵த்து 9-வது ஆக்ட்.

(2) யாதொரு விசேஷ சட்டதிட்டத்தினாலாவது பிரதேச சட்டதிட்டத்தினாலாவது யாதொரு வியாஜ்ஜியத்திற்கோ அப்பீலுக்கோ மனுவுக்கோ முதல் ஷெட்யூலின்படி அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவிலிருந்து வேறானதாயுள்ள ஒரு கெடுவு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்தக் கால அளவு அதற்கு ஷை ஷெடயூலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தாற்போலவே 3-வது பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகபபடும்; மேலும், யாதொரு விசேஷ சட்டதிட்டத்தினாலாகிலும் பிரதேச சட்டதிட்டத்தினாலாகிலும் யாதொரு வியாஜ்ஜியம், அப்பீல் அல்லது மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் யாதொரு கெடுவு காலத்தை நிச்சயிக்கும் காரியத்துக்காக—

(a) 4-வது பிரிவு, 9-வது முதல் 18-வது வரையிலுள்ள பிரிவுகள், 22-வது பிரிவு ஆகிய இவைகளில் கண்ட நிபந்தனைகள் - ஷை விசேஷ சட்டதிட்டம் அல்லது பிரதேச சட்டதிட்டத்தினால் வெளிப்படையாய் விலக்கப்படாமலிருக்கிற வரையிலும் அளவுக்கும் மாத்திரமே பிரயோகப்படும் ; அல்லாமலும்

(b) இந்த ஆக்டில் கண்ட மற்ற நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா ;"

(b) (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கு முறையே (3), (4) என்று மீண்டும் இலக்கமிடவேண்டும்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.